**தலைப்பு 179 – வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் 4 ஆம் பந்தி வரை ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 284 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அவ்வமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 179 | வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 2015 யூலை 29 |
| 284 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 2015 யூலை 16 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,569.3 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,343.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 5.5 மில்லியனிற்கும் ரூபா 220.1 மில்லியனிற்கும் அதாவது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 5 சதவீதத்திற்கும் 15 சதவீதமாகவும் இருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 179 | 105.7 | 100.2 | 5.5 | 5.20 |
| 284 | 1,463.6 | 1,243.5 | 220.1 | 15.04 |
| மொத்தம் | 1,569.3 | 1,343.7 | 225.6 | 14.38 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் 2014 ஆண்டிற்கு 20.03.02.06 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 17 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 17.03 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீட்டு வருமானத்தில் 100.1 சதவீதமான வருமானம் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17901 | 4 | 3.4 | 1.8 | 3.2 | 30 | 9.0 |
| 28401 | 40 | 41.6 | 28 | 32.4 | 135 | 132.09 |

## 2.4 கட்டுநிதி கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 674,418 ஆக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 7002/0000/00/0418/0013/000 | 29,000 |
| வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 7002/0000/00/0145/0013/000 | 645,418 |
| மொத்தம் | | 674,418 |

## 2.5 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 171,271,425 மொத்தமாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 6000/0000/00/0015/0188/000 | 613,270 |
| வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0136/000 | 170,658,155 |
| மொத்தம் | | 171,271,425 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு அதன் கீழான திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 179 வனசீவராசிகள் வளங்கள் அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | பற்றுச்சீட்டுப் புத்தகப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | கேள்வி கோரல் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 மிகை செலவினம்

முறையான அங்கீகாரமொன்றில்லாமல் 12 செலவின விடயங்களை மிகைத்து ரூபா 1,288,869 மொத்தம் செலவிடப்பட்டிருந்தது.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 350,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 செலவின விடயங்களுக்கு ரூபா 3,562,732 கூட்டுத்தொகையான மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாட்டின் 21 சதவீதத்திற்கும் 43 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 3.4 கட்டுநிதி கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் நிலவி வரும் ரூபா 29,000 ஆன கட்டுநிதி கணக்கின் மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.5.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2014 ஆம் ஆண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் கூறப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 760 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

2014 ஆம் ஆண்டின் போது வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு முன்னால் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த 03 கட்டில்கள், 02 அலுமாரிகள், 06 கதிரைகளுடன் கூடிய உணவு மேசை, 01 சோபா இருக்கை, 01 LCD தொலைக்காட்சி இயந்திரம், 03 காற்றுச்சீராக்கி இயந்திரங்கள், 02 மடிக் கணனிகள், 01 அச்சீட்டு இயந்திரம், 02 மின்விசிறிகள், 01 கணனி தொகுதி உட்பட 46 பொருள் உருப்படிகளை முன்னால் அமைச்சரால் 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் அமைச்சிற்கு கையளித்திருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத நீரக வள முகாமைத்துவ அமைச்சுக்குரிய மோட்டார் வாகனமொன்றும் கல்வித் அமைச்சிற்குரிய 04 மோட்டார் வாகனங்களும் கல்வி உயர் கல்வி அமைச்சிற்குரிய இரண்டு மோட்டார் வாகனங்களும் முறையே 2013 சனவரி 28 ஆந் திகதி மற்றும் 2013

மார்ச் 12 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

**3.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 மற்றும் 110 | - | 04 மோட்டார் வாகனங்களின் ஆரம்ப பெறுமதி, சேதம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தின் போது அண்மித்த பெறுமதி மற்றும் திருத்தங்களுக்காக ஏற்படும் செலவினம் என்பன சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 105(1) மற்றும் (2) | - | அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட தொகை மற்றும் அறவிடக்கூடிய ஆகக் கூடிய பெறுமதி தொடர்பாக சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை | | |
| 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க சுற்றறிக்கை | 750,000 | வாகனத்திற்கு மாதமொன்றிற்கு செலுத்தக்கூடிய கூடிய ஆகக்கூடிய வாடகை ரூபா |

40,000 ஆக இருந்த போதிலும், மாதமொன்றுக்கு ரூபா 250,000 வீதம் 03 மாதங்களுக்கு ரூபா 750,000 செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 செயலாற்றல்**

2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த அறிக்கையின் தகவல்களின் பிரகாரம் அமைச்சின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகப் பிரிவில் பதவியணியினர் பயிற்சியின் கீழ் எதிர்பார்த்த இலக்கிற்காக சுட்டிகளாக நிகழ்ச்சித்திட்டங்கள் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், செயன் முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது நிகழ்ச்சித்திட்டங்கள் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் உத்தியோகத்தர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் செயலமர்வுகளுக்காகவும் ரூபா 920,358 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்டிருந்த போதிலும், செயலமர்வுகளுக்கு சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 01 முதல் 11 வரை நிதி மற்றும் பௌதீக இலக்குகள் குறிப்பிடப்படாமையால் ரூபா 2,437,042 தொகையான செலவினம் தொடர்பாக அதன் பௌதீக செயலாற்றலுடன் ஒப்பிட முடியாதிருந்தது.

(ஈ) தேசிய வனாந்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், மின்சார வேலி நிர்மாணம், காட்டு யானைகளை தடுத்து வைக்கும் நிலையங்களை நிர்மாணித்தல், வாஸஸ்தலங்களை போசித்தல் ( Habitat Enrichment) செய்வதற்குரிய நடவடிக்கைகளை கூட்டிணைத்தல் மற்றும் மேற்பார்வைக்காக பௌதீக இலக்குகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 இன் வனசீவராசிகள் பொறுப்பின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பௌதீக இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வனசீவராசிகள் பொறுப்பின் 2014 ஆம் ஆண்டிற்குரிய வருமான சேகரித்தல் திட்டத்தின் பிரகாரம் ரூபா 13,900,000 ஆன வருமானமொன்று மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 11,224,554 தொகையான வருமானம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் வனசீவராசிகள் பொறுப்பில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 10 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 42 | 37 | 09 | 04 |
| (iv) | ஏனையவை (அமைய/தற்காலிகம்/ ஒப்பந்தம் | 25 | 24 | 01 | - |
| | மொத்தம் | 79 | 74 | 05 | 04 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணப்பட்ட 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இரண்டாம் நிலைப் பதவிகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 04 மிகை ஊழியர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 284 – வனச்சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

28401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அந்த இணக்கக் கூற்றுக்கள் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலதாமதத்தின் பின்னர் 2015 யூலை 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | குழுக் கூட்ட அறிக்கைகள் | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | கேள்வி கோரல் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 4.3 கட்டுநிதிக் கணக்குகள்

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 49,559 ஆக இருந்தது.

### 4.4 பொது வைப்புக் கணக்கு

02 ஆண்டுகளை விஞ்சிய (காணி வைப்புக்கள் தவிர) ரூபா 31,286,218 கூட்டுத்தொகையான 61 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 வருமானக் கணக்கு

1958 இன் 01 ஆம் இலக்க கால்நடை அதிகாரச் சட்டம் மற்றும் 2009 நவம்பர் 26 ஆந் திகதிய 1629/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் கால்நடைகளை போக்குவரத்துச் செய்யும் போது அறவிடப்படுகின்ற கட்டணம் இத்திணைக்களத்தின் வருமானமொன்றாக இல்லாத போதிலும், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 139,858 ஆன பெறுவனவுகள் திணைக்களத்தின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

28401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 3,791,586 ஆன நிலுவைக் கடன் மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து

இருந்து வந்த போதிலும், அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமாக காணப்பட்டது.

(ஆ) 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 559,120 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் இணக்கக் கூற்றின் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், சீசீ 10 பதிவேட்டில் அக்கடன் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற சொத்துக்கள்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது சொந்தமான 21 மோட்டார் வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.8 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 134(3) | - | 2014 ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 104(03) மற்றும் 04 | - | 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றிருந்த நட்டங்கள் தொடர்பாக ஆரம்ப புலனாய்வு நடாத்தப்பட்டு நட்டத்தின் |

| | | |
|---|---|---|
| | | பெறுமதியை நிச்சயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத 11 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| **(ஆ) சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை** | | |
| 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17 ஆம் இலக்க சுற்றறிக்கை | 100,000 | நட்டங்களைப் பதிவழிக்கும் போது அந்த ஆதனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி அல்லது கிரயம் ஆகிய இரண்டில் கூடிய பெறுமதி திணைக்களத்தின் அண்மித்த செலவிமும் உள்ளடக்கப்பட்டு கிரயம் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 100,000 தொகையான அதன் கிரயம் கணக்கெடுக்கப்படாமல் ரூபா 80,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| **(இ) நிதி மற்றும் திட்டமிடல் அமச்சின் சுற்றறிக்கை** | | |
| 2013 சனவரி 01 ஆந் திகதிய மற்றும் பீடீ/ஈபீபி/4/1/14/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.3 ஆம் பந்தி | 6,863,450 | எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர், போக்குவரத்து செலவினம் என்பன வருடாந்த எல்லையை மிகைக்காத வகையில் முகாமை செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த எல்லை மிகைத்து 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. |

## 4.9 செயலாற்றல்

திணைக்களத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) திணைக்களத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முழு நிதிஏற்பாட்டுத் தொகையான ரூபா 216.887 மில்லியனான 166 செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை மிகைத்து 41 செயற்பாடுகளுக்குரிய ரூபா 556.957 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்காத பணிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹொரவப்பத்தான மின்சார வேலி நிர்மாணத்தின் ஒப்பந்தம் தேசிய இயந்திர உபகரண அதிகாரசபையின் செயற்திட்ட பொறியியலாளர் மற்றும் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2012 யூன் 06 ஆந் திகதி ரூபா 189,538,263 பெறுமதியில் நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பிரகாரம் அதன் நடவடிக்கைகள் 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 சனவரி மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஹொரவப்பத்தான யானை காப்பக நிலைய நிர்மாணத்தின் போது 09 கிலோ மீற்றர் அடர்ந்த காடு மற்றும் 07 கிலோ மீற்றர் மத்திய அளவிலான காடுகள் வெட்டி அகற்ற வேண்டியிருந்தது. அக்காடுகளிலிருந்து வெற்றி அகற்றிய மரங்கள் தொடர்பாக திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி யானை வேலி நிர்மாணத்தின் போது ரூபா 72,817,562 தொகை அரச கூட்டுத்தாபனமொன்றுக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) மேற்குறித்த உடன்படிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் தகைமையான பொறியியலாரின் / தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் மின்சார வேலி நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்காய்வினால் வேலைத்தளத்தில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணம் மேற்கொள்ளப்படாதிருந்தமை

வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் தூணும் தரமற்றதாக இருந்தது.

(iv) இந்த யானை காப்பக நிலையத்தில் 03 குளங்களை புனரமைப்பதற்கு கமநல சேவைகள் திணைக்களம் தயாரித்த ரூபா 11,364,945 ஆன மதிப்பீட்டை தயாரித்து அம் 03 குளங்களை திருத்தியமைக்கும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8,417,314 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) யானை வேலியை சுற்றி வீதியின் சப்பாத்து பாலம் நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது தரத்தில் குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைக்காக ரூபா 1,666,509 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அளவிடப்பட்ட நட்டமாக 240 நாட்களுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 783,887 தொகையையும் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. வேலை பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய 77 பாலங்களில் 44 பாலங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 14,318,712 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 33 பாலங்கள் நிர்மாணிக்கப்படாதிருந்தமை 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(vi) 2009 இன் 22 ஆம் இலக்க வன உயிரினங்கள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் மூலம் உயிர்களைப் பாதுகாத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்குறித்த யானைக் காப்பக நிலையத்தை நிர்மாணிக்கும் போது யானை வேலிகளை யானைகள் உடைத்து விடுவதைத் தவிர்ப்பதற்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட கம்பங்களின் இரண்டு பக்கங்களை கூராக்குவதாலும் கம்பத்தை நிறுத்துவதற்கு 3 கம்பிச் சுற்று இடுவதாலும் யானைகளுக்கு காயங்கள் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 4.10 நட்டங்களும் இழப்புக்களும்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் அறவிடுவதற்கு இயலாதிருந்த 29 சந்தர்ப்பங்களுக்குரிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 3,541,961 ஆன சேதங்கள்

தொடர்பாக நிதிப்பிரமாணம் 108 இன் பிரகாரம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரின் மூலம் விட்டுவிடல் கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.11 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த பின்வரும் கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) வீடுகளிலுள்ள பெண் யானைகள் (பிடி) கருவுற்றுள்ளமை தொடர்பாக 2009 இன் 22 ஆம் இலக்க வன உயிரினங்கள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 10 மற்றும் 22(9) ஆம் பிரிவின் படி யானைக் குட்டிகளின் பிறப்பு பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இச்சட்டத்தின் பிரகாரம் உரிமையாளர்களால் மரணித்த யானைகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யானைகள் சட்ட விரோதமாக காட்டிலிருந்து பிடித்து வைக்கப்பட்டிருந்த பின்னர் பதிவுசெய்து அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரைகளின் (ரிட் 625/09 ஆம் வழக்கு) படி பதிவுசெய்யப்பட்டிருக்காத யானைகளை தம்வசம் வைத்துள்ள நபர்களிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் காட்டுக்கு வெளியேயுள்ள யானைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக வழிகாட்டலொன்றும் தயாரிக்கப்பட வேண்டுடியும் இருந்தது. யானைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை, விசேடமாக பதிவேடுகளின் பாதுகாப்பு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டன. இதன் காரணமாக யானைகளின் பதிவை குறித்து வைத்திருப்பதற்காக பராமரிக்கப்பட்டிருந்த 06 பதிவேடுகளில் ஒரு பதிவேடு 2012 ஆம் ஆண்டிலிருந்து காணாமல் போயிருந்தது.

(ஈ) யானைகளை பதிவுசெய்தல் நடைமுறையில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் காலநீடிப்புச் செய்கையில் காலநீடிப்புச் செய்யப்பட்டமைக்கான சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்காமை மற்றும் அதற்காக குறிப்பான நடைமுறையொன்றும் காணப்படவில்லை.

(உ) நுவரெலிய மாவட்டத்திற்குரிய ஹக்கல அதிஉயர் பாதுகாப்பு இயற்கை நிலப்பரப்பிலும் பதுளை மாவட்டத்திற்குரிய அத்துமீறி பிடித்துக்கொள்ளப்பட்ட காணிகள் முறையே 116 மற்றும் 103 என அறிவிக்கப்பட்டிருந்தது. அச்சுற்றாடல் பிரதேசங்களில் அத்துமீறி பிடித்துக்கொள்ளப்பட்டவைகள் தொடர்பில் சட்டரீதியான படிமுறைகளை மேற்கொள்வதற்கு 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் ஹக்கல உயர் வனாந்திரத்தில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை தடைசெய்தல், அத்துமீறிய குடியிருப்பாளர்களை நீதிமன்றத்தின் முன்நிறுத்தி அகற்றுதல், ஹக்கல அதி உயர் பாதுகாப்பு எல்லைகளை அடையாளப்படுத்தல், அத்துமீறிய குடியிருப்பாளர்களிற்கு மின்சார வசதிகளை வழங்காதிருத்தல், அதி உயர் பாதுகாப்பு பிரதேசத்தில் அனுமதியற்ற பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிற்காக தொடர்ந்தும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் அல்லது நீடித்தல் அல்லது புதுப்பித்தலை கைவிடுதல் போன்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.12 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 56 | 23 | 33 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 32 | 26 | 6 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,419 | 896 | 523 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 468 | 427 | 41 |
| | மொத்தம் | 1,915 | 1,372 | 603 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 603 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.